இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

சனிக்கிழமை 15.08.2026


# பொய்யில் புரளும் விஜய் அரசு!

“இரண்டு மாத காலத்தில் அரசின் கருவூலத்துக்கு ரூ.15 ஆயிரம் கோடியைக் கொண்டு வந்துவிட்டோம்” என்று மார்தட்டிச் சொன்னார் நிதி அமைச்சர் மரிய வில்சன்.

“15 ஆயிரம் கோடி வந்தால், அது எந்தெந்த வகையில் எல்லாம் வந்துள்ளது என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவிக்க வேண்டும்” என்று கேள்வி எழுப்பினார் முன்னாள் நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு.

அதற்கு இந்நாள் நிதி அமைச்சர் மரிய வில்சன் என்ன சொல்லி இருக்கிறார் தெரியுமா? “ரூ.15 ஆயிரம் கோடி வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எதிர்பார்க்கப்படுகிறது என்று சொன்னாலே வந்தது தானே?” என்று சொல்லி இருக்கிறார். எவ்வளவு பெரிய பொய்யைச் சர்வசாதாரணமாகச் சொல்கிறார்கள் என்பது இதன் மூலமாகத் தெரிகிறதா?

**தங்கம் தென்னரசு எதிர்க் கேள்வி கேட்காமல் போயிருந்தால், மரிய வில்சன் சொன்னது தான் அனைத்து நாளிதழ்களிலும் தலைப்புச் செய்தியாக வந்திருக்கும். இத்தகைய பொய்களில் தான் விஜய் அரசு நாட்களை நீட்டித்துக் கொண்டு இருக்கிறது.**

ஆயத்தீர்வை மூலமாக ரூ.1500 கோடி வந்துள்ளதாம். மோட்டார் வாகன வரி மூலமாக ரூ.750 கோடி வந்துள்ளதாம். பத்திரப்பதிவு, முத்திரைத் தாள் மூலமாக ரூ.5000 கோடி வரப்போகிறதாம். இதை எல்லாம் வைத்துச் சொன்னாராம். இவை எல்லாம், மரிய வில்சன் கோட்டைக்கு வராமல் வீட்டிலேயே சும்மா இருந்தாலே வரும் வருமானங்கள். மாதம்தோறும் வழக்கமாக அரசாங்கக் கருவூலத்துக்கு வருகிறவை தான் இவை. இதில் த.வெ.க. ஆட்சி அறுத்த அறுப்பு என்ன? அதைச் சொல்லுங்கள்.

**‘கடன் வாங்கி விட்டார்கள், கடனை மட்டும் தான் வாங்கினார்கள், 30 விழுக்காட்டை அவர்கள் எடுத்துச் சென்று விட்டார்கள், அதைத் தடுத்தாலே அரசாங்க கஜானாவுக்கு பணம் வந்துவிடும், கடன் வாங்கத் தேவையில்லை’ என்று பெரிய பொருளாதார மேதையைப் போல பொது மேடைகளில் தேர்தலுக்கு முன்னால் கனைத்தார் விஜய். இவர் முதலமைச்சராக வந்ததும் என்ன செய்கிறார்? கடன் வாங்குகிறார். கடன் வாங்கப் போகிறார். அதை மட்டும் தான் இந்த இரண்டு மாதமும் செய்துள்ளார்.**

அவர் கேட்ட கேள்வியையே அவரைப் பார்த்துக் கேட்போம். ‘அவர்கள் எடுத்துச் சென்றதாக நீங்கள் சொல்லும் 30 விழுக்காட்டை அப்படியே விட்டிருந்தால் கூட நீங்கள் கடன் வாங்கத் தேவையில்லையே? அதை மீறி ஏன் கடன் வாங்குகிறீர்கள்?’ - இப்படி ஒரு கேள்விக்கு விஜய்யால் என்ன பதில் சொல்ல முடியும். ‘அட விடுங்க பாஸ்’ என்று வேண்டுமானால் சொல்வார். தங்கம் தென்னரசு கேட்ட கேள்விக்கு பதில் சொல்லாமல், சிரித்தாரே இன்றைய நிதி அமைச்சர் மரிய வில்சன் அதைப் போல விஜய் சிரிக்கலாம்.

வாய்க்கு வந்ததை எல்லாம் அடித்து விட்டார் விஜய் என்பதை இப்போது தான் மக்கள் உணரத் தொடங்கி இருக்கிறார்கள். அதிகாரம் இல்லாதபோது என்ன வேண்டுமானாலும் பேசலாம். அதிகாரத்தில், பொறுப்பில் உட்காரும் போதுதான் உண்மை நிலைமைகள் புரியும்.

‘நிதி நிலைமை மோசமாக உள்ளது, ஏராளமாக கடன் வாங்கி வைத்துவிட்டார்கள்’ என்று முந்தைய தி.மு.க. அரசு மீது தொடர்ந்து ஒரு பொய்யை நிதி அமைச்சர் மரிய வில்சன் சொல்லிவந்தார். வெள்ளை அறிக்கை வெளியிடப் போவதாக மிரட்டினார். வெள்ளை அறிக்கை வெளியிட்டார். தமிழ்நாட்டுக்கு எவ்வளவு கடன் இருக்கிறது என்ற எல்லாரும் தெரிந்த செய்தி தான் அந்த வெள்ளை அறிக்கையில் இருந்தது.

தான் சொன்ன பொய்யையும் அவரால் காப்பாற்ற முடியவில்லை. ‘மத்திய அரசின் ஒப்புதல் இல்லாமல் கடன் வாங்கிவிட முடியாது. அந்த உச்சவரம்புக்குள் தான் கடன் தொகை உள்ளது’ என்று அமைச்சர் மரிய வில்சனே ஊடகங்களின் முன் உண்மையை ஒப்புக் கொண்டார்.

**‘மாநிலங்களின் கடன் உச்சவரம்பை ஒன்றிய அரசுதான் நிர்ணயிக்கிறது. ஒன்றிய அரசின் அனுமதி இல்லாமல் மாநிலங்களால் எந்தக் கடனும் வாங்க முடியாது. அவர்கள் அனுமதித்த அளவில் தான் தமிழ்நாடு அரசின் கடன் அளவு இருக்கிறது. அதில் எந்த மாற்றமும் இல்லை’ என்று நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சித்திக், அமைச்சரை அருகில் வைத்துக் கொண்டே சொல்லி விட்டார்.**

‘கடன் வாங்கி வைத்துவிட்டார்கள்’ என்று அமைச்சர் மரிய வில்சன் கட்டமைத்த பொய்யை அவரே உடைத்து விட்டார்.

‘முந்தைய ஆட்சியில் செயல்படுத்தப்பட்ட திட்டங்கள் சமூகநலன் சார்ந்தது தான். அதைக் குறை சொல்லவில்லை. எந்தத் திட்டத்துக்கும் தேவையில்லாமல் நிதி செலவிடப் பட்டதாகக் கண்டறியவில்லை’ என்றும் அமைச்சர் மரிய வில்சன் அப்போது ஒப்புக் கொண்டார். அவர்கள் கட்டமைத்த பொய்யை அவர்களே உடைத்தும் விட்டார்கள்.

**“பொய்யுடை ஒருவன்**
**சொல் வன்மையினால்**
**மெய் போலும்மே மெய் போலும்மே”**

- என்பது அதிவீரராம பாண்டியர் (வெற்றிவேற்கை) எழுதிய வரிகள் ஆகும். பேசும் ஆற்றல் கொண்டவர், தனது பேச்சால் பொய்யை உண்மை என்பதைப் போல எடுத்துச் சொல்லி விடுவார் என்பது இதன் பொருள்.

**விஜய் தனது வெத்து வசனங்கள் மூலமாக கட்டமைத்தது அனைத்தும் பொய்கள் மட்டுமே என்பது நாளுக்கு நாள் வெளிச்சத்துக்கு வருகிறது. அதனால் அவரும் அசிங்கப்பட்டு நிற்கிறார்.**

●●

### சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரை!

# வடக்கு மண்டல கழக வழக்கறிஞர் அணி கலந்துரையாடல் கூட்டம்!

### கழக சட்டத்துறைச் செயலாளர் என்.ஆர்.இளங்கோ அறிவிப்பு!

**சென்னை, ஆக. 15-**

**கழக இளைஞர் அணி செயலாளர் - சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சிறப்புரையாற்றும் வடக்கு மண்டல வழக்கறிஞர் அணி கலந்துரையாடல் கூட்டம் குறித்து சட்டத்துறைச் செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோவின் அறிவிப்பு வருமாறு:-**

வடக்கு மண்டல தி.மு.க. வழக்கறிஞர் அணி கலந்துரையாடல் கூட்டம், வருகிற 16.8.2026 ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணியளவில் சென்னை, அண்ணா அறிவாலயம், “கலைஞர் அரங்கில்”, கழக இளைஞர் அணி செயலாளர் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி ஆகியோர் சிறப்புரையாற்றிட, சட்டத்துறைச் செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ தலைமையில், நடைபெறும் இக்கூட்டத்தில் மூத்த வழக்கறிஞர்கள் ஆர்.சண்முகசுந்தரம், இரா.விடுதலை, பி.வில்சன் எம்.பி., வழக்கறிஞர் ஆர்.கிரிராஜன் எம்.பி., ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

இக்கூட்டத்தில் சென்னை வடக்கு, சென்னை வடகிழக்கு, சென்னை கிழக்கு, சென்னை மேற்கு, சென்னை தென்மேற்கு, சென்னை தெற்கு, திருவள்ளூர் கிழக்கு, திருவள்ளூர் மத்திய, திருவள்ளூர் மேற்கு, காஞ்சிபுரம் வடக்கு, காஞ்சிபுரம் தெற்கு, இராணிப்பேட்டை, வேலூர் வடக்கு, வேலூர் தெற்கு, திருப்பத்தூர், திருவண்ணாமலை வடக்கு, திருவண்ணாமலை தெற்கு, விழுப்புரம் வடக்கு, விழுப்புரம் தெற்கு, விழுப்புரம் மத்திய, கள்ளக்குறிச்சி வடக்கு, கள்ளக்குறிச்சி தெற்கு, கடலூர் கிழக்கு, கடலூர் மேற்கு, தருமபுரி கிழக்கு, தருமபுரி மேற்கு, கிருஷ்ணகிரி கிழக்கு கிருஷ்ணகிரி மேற்கு, சேலம் கிழக்கு, சேலம் மேற்கு, சேலம் மத்திய, நாமக்கல் கிழக்கு, நாமக்கல் மேற்கு ஆகிய மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரி, புதுச்சேரி - காரைக்கால் ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் உயர்நீதிமன்ற மற்றும் மாவட்ட அரசு முன்னாள் வழக்கறிஞர்கள் - கழக வழக்கறிஞர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு என்.ஆர். இளங்கோ அறிவித்துள்ளார்.

### எதிர்க்கட்சிகளின் கேள்விகளுக்கு ஒன்றிய அரசு செவி சாய்ப்பதில்லை!

# மோடியும், அமித்ஷாவும் நாடாளுமன்றத்துக்கு வருவதே இல்லை!

### மாநிலங்களவை தி.மு.க. குழுத் தலைவர் திருச்சி சிவா குற்றச்சாட்டு!

சென்னை, ஆக. 15 -

பிரதமர் மோடியும், உள்துறை அமைச்சர் அமித்ஷாவும் நாடாளுமன்றத்துக்கு வருவதே இல்லை என்று மாநிலங்களவை தி.மு.க. குழுத்தலைவர் திருச்சி சிவா குற்றம் சாட்டியுள்ளார்.

சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய கழக துணைப் பொதுச் செயலாளரும், மாநிலங்களவை தி.மு.க. குழுத்தலைவருமான திருச்சி சிவா,



ஒன்றிய பா.ஜ.க. அரசின் பிடிவாதத்தால் நாடாளுமன்ற கூட்டத்தொடர் முழுமையாக முடங்கியதாக குற்றம் சாட்டினார். பிரதமர் மோடியும், உள்துறை அமைச்சர் அமித்ஷாவும் நாடாளுமன்றத்துக்கு வருவதே இல்லை என்று விமர்சித்தார். எதிரக் கட்சிகளின் கேள்விகளுக்கு செவிசாய்க்காமல் ஏற்கனவே தயாரித்து வைக்கப்பட்டுள்ள அறிக்கையையே ஒன்றிய அமைச்சர்கள் வாசித்ததாகவும் திருச்சி சிவா குற்றம் சாட்டினார். நீட் தேர்வை ரத்து செய்ய வேண்டும் என்பதுதான் தி.மு.க.வின் நிலைப்பாடு என்றும் திருச்சி சிவா குறிப்பிட்டார்.

பேட்டியின் போது கவிஞர் சல்மா எம்.பி. உடனிருந்தார்.

### ஒரு லட்சம் ரூபாய் முதலீடு வைத்துள்ள ஒருவர்

# ரூ. 10 ஆயிரம் கோடியில் தொழில் முதலீடு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்த வேடிக்கை!

### ‘டப்பிங் – ரீல்ஸ்’ முதல்வர் – சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு விமர்சனம்!

*சென்னை, ஆக. 15 -*

*சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு அவர்களின் அறிக்கை வருமாறு :-*

*2021 ஆம் ஆண்டு முன்னாள் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முதல்வராகப் பொறுப்பேற்ற பொழுது தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி 0.07% இருந்தது.*

*கடந்த 5 ஆண்டு கால கழக ஆட்சியில் உலக பொருளாதார வளர்ச்சி 3%. இந்தியாவின் வளர்ச்சி 7%. தமிழ்நாட்டின் வளர்ச்சி 11.3%. உற்பத்தி துறையின் வளர்ச்சி*

*14% உயர்ந்து தமிழ்நாடு பொருளாதார வளர்ச்சியில் முதன்மை மாநிலமாகவும், எலக்ட்ரானிக் பொருட்களின் இந்திய ஏற்றுமதியில் 44% தமிழ்நாட்டின் ஏற்றுமதியாகவும் இருந்தது.*

*கடந்த ஆட்சியில் மாவட்ட ஆட்சியர் மூலம் ஆண்டுக்கு மூன்று முறை வேலை வாய்ப்பு முகாம்கள் நடத்தி பல லட்சம் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்கிக் கொடுத்தவர் முன்னாள் முதல்வர் மு.க.ஸ்டாலின்.*



*நேற்று முன்தினம் நடைபெற்ற முதலீட்டாளர்கள் மாநாட்டில் பத்திரிகையாளர்களை அனுமதிக்காமல், ஏற்கனவே கடந்த ஆட்சியில் உருவாக்கிய முதலீடுகளுக்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டு தனது ஆட்சியில் உருவாக்கிய திட்டங்கள் போல் காட்சிப் படுத்துவதற்காக ரீல்ஸ் போடும் முதல்வரே உங்களுக்கு வெட்கமாக இல்லையா?*

*அதிலும் ஒரு லட்ச ரூபாய் முதலீடு வைத்துள்ள ஒரு சாமானியர் ரூ. 10,000 கோடியில் தொழில் முதலீடு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்திருப்பது வேடிக்கையாக உள்ளது.*

*மேலும் தொழில் வளர்ச்சிக்கு அடிப்படையான பரந்தூர் ஒசூர் புதிய விமான நிலைய பணிகளை முடக்கி விட்டு, தனது தொழில் நண்பர்களான ஆந்திரா, கர்நாடகாவிற்கு துணை போகும்*

*டப்பிங் முதல்வரே! உங்கள் செயல் வாக்களித்த தமிழ்நாட்டு மக்களுக்கு செய்யும் மிகப் பெரிய துரோகம் இல்லையா CM sir?*

*இவ்வாறு சட்டப் பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு தெரிவித்துள்ளார்.*

### மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. தலைமையில்

# துறைமுகம் மேற்குப் பகுதிச் செயலாளர் எஸ்.முரளி இல்லத் திருமண விழா!

### சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்துகிறார்!

*சென்னை, ஆக. 15-*

*சென்னை கிழக்கு மாவட்டம், துறைமுகம் மேற்கு பகுதிக் கழகச் செயலாளர் எஸ்.முரளி சகோதரர் அரங்கநாத சுவாமி திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் ஜெ. ஹரிக்குமார் - எச்.கிரண்குமாரி ஆகியோரின் இல்லத் திருமண வரவேற்பு விழா இன்று (15.08.2026 சனிக்கிழமை) மாலை 7 மணிக்கும், திருமண விழா நாளை (16.08.2026 ஞாயிற்றுக்கிழமை) காலை 10 மணிக்கு மேல், சென்னை, கொரட்டூர், எண். 1267, கிழக்கு சாலையில் உள்ள கிரண் பேலஸ் மண்டபத்தில் நடைபெறுகிறது.*

*சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர், முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. தலைமை வகிக்கிறார்.*

*மேயர் பிரியா ராஜன், தயாநிதி மாறன் எம்.பி, ஜோசப் சாமுவேல், எஸ். இராஜசேகர், டி.எஸ்.பி. இராஜகோபால் எம்.சி, எம்.டி.ஆர்.நாகராஜ், பி. கே.மூர்த்தி எம்.சி, பி.ஸ்ரீராமுலு எம்.சி, சாந்தகுமாரி எம்.சி, எம்.விஜயகுமா,ர் ஜி.எம்.தேவன், இசட். ஆசாத் எம்.சி, என்.பி.எம். ஷேக் அப்துல்லா, ஆர். கலைச்செல்வி,எம்.இ.கனி, பா.ஜெகதீஷ் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.*

*எல். சம்பத்குமார், பி.விஜயகுமார், க.பா.பிரதீப்குமார், எம்.விநாயகம், நா.ரஞ்சித் விஜயாலயன், மே.ஜனார்தனன், எம்.முத்துக்குமார், நா.சுந்தரம், எஸ்.சந்தியாகு, வி.சந்தான லட்சுமி, சி.பா.ஜெயராமன், டி.போஸ், நா.மோகன், எஸ்.வெங்கடேசன், கே.ஜெய்பிரகாஷ், டி.சேகர் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.*



*விழாவில் கழக இளைஞரணிச் செயலாளர், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகிறார்.*

*விழாவில் ஆர்.எஸ். பாரதி, டி.கே.எஸ்.இளங்கோவன், அன்பகம் கலை, பா.தாயகம் கவி, துறைமுகம் காஜா, இரா.கிரிராஜன் எம்.பி, ப.ரங்கநாதன், கே.எஸ்.ரவிச்சந்திரன், தமிழன் பிரசன்னா,*

*கே. சந்துரு, கோ.ஏகப்பன், சி. மகேஷ் குமார், தேவஜவகர், புனிதவதி எத்திராசன் எம்.சி, ஐ.சி. எப்.வ.முரளிதரன், ஏ.நாகராசன், கூ.பி.ஜெயின் எம்.சி, வே.வாசு, சொ.வேலு எம்.சி, வி.சுதாகர், செ. தமிழ்வேந்தன், எம்.சாமிகண்ணு, சரிதா மகேஷ்குமார், வானவில் விஜய், நா.துலுக்காணம், எம். பெரோஸ்கான், க.ராஜ்முகமது, இரா.வீரமணி, எல். பி.எப்.மோகன், சுதா தீனதயாளன் எம்.சி, இராஜேஸ்வரி ஸ்ரீதர் எம்.சி, ஜி.தாமோதரன்,*

*எம்.ஜெய்சங்கர், ஆர். ரவிச்சந்திரன், பா.கதிரவன், ஜி.ராமமூர்த்தி, டி. சதீஷ்குமார், வே.பா.பிரபாகரன், எல்.சத்யநாராயணன், எஸ்.புகழேந்தி, ஆர்.எ.அஸ்லாம், டி.கதிரவன் (எ) ராஜா, எம்.பரத்குமார், கே.கவியரசு, ஆ.நா. பார்த்திபன், லண்டன் க. முருகன், எல்.எழிலரசு, எம்.வி.ஆர்.சரவணன், வி. அசோக்குமார், வி.எம். முருகவேல், எம்.நாராயணன், ஏ.பி.செந்தில், பி. சகாயராஜ், வீடியோ கே. சம்பத், என்.சேகர் (எ) பிரஸ் சேகர், எஸ்.கதிர்வேல், வி.சங்கர், எம். சுரேஷ், ஆர்.தங்கமணி, ஏ.மதுசூதனன், பி.ஜி.சுகுமார் வி.தம்பிதுரை, ஹாஜி முகமது, வெ.பரிமளம் எம்.சி, எல்.நவீன் தாஹா எம்.சி, ராஜேஷ் ஜெயின் எம்.சி மற்றும் மாவட்ட அனைத்து அணிகளின் துணை அமைப்பாளர்கள், பகுதி அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், வட்டக் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.*

*57 (அ) வட்டக் கழகச் செயலாளர் பா.அண்ணாதுரை, பகுதி துணைச் செயலாளர் கே.ஆர்.அபரஞ்சி, மாவட்டப் பிரதிநிதி டி. எஸ்.சேகர், 84 வது வட்டக் கழகச் செயலாளர் மு.விஜயகுமார் ஆகியோர் அனைவரையும் வரவேற்கின்றனர்.*